**Centre Tamoul d'Enseignements en France**

# பிரான்ஸ் தமிழர் கல்வி நிலையம்

## தமிழ்ப் பேச்சுப் போட்டி - 2022

13 வயதுக்குட்பட்டவர்கள்

---

# தமிழ் இலக்கியம்

ஒரு நீண்ட வரலாறு கொண்ட தமிழ்மொழியில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே இலக்கியங்கள் தோன்றிவிட்டன. தமிழ்மொழியில் வாய்மொழிப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு செவ்வியல் இலக்கியங்கள் தோன்றின. ஆரம்பகால பாடல்கள் பல பேணப்படவில்லை. சங்க இலக்கியப் பாடல்களில் பாணர் பாடல்களும் பாணர் அடிச்சுவட்டில் புலவர்கள் எழுதிய கவிதைகளும் உண்டு. உலக மொழிகளில் செவ்வியல் இலக்கியம் உள்ள மொழிகளை ஒரு கைவிரல்களுக்குள் அடக்கிவிடலாம். அம்மொழிகளிலும் தொடர்ச்சியாக இலக்கியம் உள்ள மொழி என்றால் மூன்று மொழிகள்தான். பல்வேறு தத்துவங்களையும் பல மதங்களின் இலக்கியங்களைக்யும் கொண்ட ஒரே மொழி தமிழ். தமிழ்மொழியில் மட்டும்தான் சைவ, வைணவ, சமண, பௌத்த, இஸ்லாம், கிறிஸ்துவ என பன்மத இலக்கியங்கள் உண்டு. தமிழ் இலக்கியம் வாழ்வியலோடு இணைந்தது. தமிழர் வாழ்வியலை அகம், புறம் என வகுத்துள்ளது. ஐந்திணையைக் கொண்ட இலக்கியம் தமிழ் இலக்கியம். தமிழர் வாழ்விடத்தையும் தொழிலையும் இணைத்து உருவான திணைக் கோட்பாட்டை உலக சமகால மானுடவியல் அறிஞர்கள் வியப்புடன் பார்க்கின்றனர்.

சங்க இலக்கியமும் அதன்பின்பு தோன்றிய அறஇலக்கியமும், காப்பியங்களும், திருமுறைகளும், திவ்வியபிரபந்தங்களும், சிற்றிலிக்கியங்களும், தேம்பாவனியும், சீறாப்புராணமும் இன்னும் இன்னும் எத்தனையோ நூல்கள் தமிழ்தாயை அலங்கரிக்கின்றன. தமிழில் நவீன இலக்கியங்களும் செழுமையுடன் உள்ளன. புதுக்கவிதை, நவீன சிறுகதைகள், நவீன நாடகப்பிரதிகள், நாவல்கள் என உலக இலக்கியத்தை அணிசெய்யும் படைப்புகள் தமிழில் தோன்றியுள்ளன. இதனை பலதேசத்து அறிஞர்களும் படித்து கொண்டாடி வருகின்றார்கள்.

நன்றி